# அடகுச் சேவை
# முக்கிய தகவல்கள் ஆவணம்

2019

**உள்ளடக்கம்**

1. அறிமுகம்

2. தகுதி

3. சிறப்பு அம்சங்கள்

4. வட்டி வீதம்

5. கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள்

6. விண்ணப்பிக்கும் முறை

7. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை

**01. அறிமுகம்**

இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அடகுச் சேவை 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கியில் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தினால் ஒழுங்கமைக்கப்படுகின்றது.

வாடிக்கையாளர் தனக்கு அவசர பணத் தேவை ஏற்படும்போது தங்கம் அல்லது தங்க நகைகளை அடகு வைத்துப் பணத்தைப் பெற இச் சேவை இடமளிக்கின்றது.

24 கரட் முதல் 18 கரட் வரையான தங்கத்தில் செய்யப்பட்ட நகைகளை DFCC வங்கி ஏற்றுக்கொள்ளும். இந்த நகைகளின் பெறுமதி நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்படும்.

அடகுக் கடனைத் தமது வசதிக்கேற்ப மீளளிக்க வாடிக்கையாளர்களுக்கு ஆகக்கூடியமாக 12 மாதகால அவகாசம் வழங்கப்படும்.

ஒவ்வொரு அடகுக் கடன் தொடர்பிலும் இந்த வசதிக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கிய அடகுச் சீட்டொன்று வழங்கப்படும்.

**02. அடகுச் சேவையைப் பெறுவதற்குத் தகுதி உடையவர்கள்**

ஒப்பந்தம் செய்யும் ஆற்றல் கொண்ட, சம்பந்தப்பட்ட நகைகளின் உரித்தாளிகள் என்று தம்மை அறிக்கையிடும் 18 வயதிற்கு மேற்பட்ட சகல இலங்கையரும் இச் சேவையைப் பெற முடியும்.

**03. சிறப்பு அம்சங்கள்**

I. கவர்ச்சியான வட்டி வீதங்களில் ஆகக்கூடுதலான கடன் தொகை.
II. உங்கள் தங்கத்தின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் மற்றும் இரகசியத்தன்மை.
III. தேவையானபோது மீட்கும் வசதியும் இலகுவான மீளளிப்புத் திட்டங்களும்.

**04. வட்டி வீதம்**

ஏற்புடைய வட்டி வீதங்களை www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

**05. கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள்**

ஏற்புடைய கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகளை www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பார்க்கலாம்.

**06. விண்ணப்பிக்கும் முறை**

நீங்கள் விரும்பும் DFCC கிளையொன்றிற்கு விஜயம் செய்து அடகுச் சேவைக்காக விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு, www.dfcc.lk என்ற எமது வலைத்தளத்தில் பிரவேசியுங்கள்.

**07. எம்முடன் தொடர்புகொள்ளும் முறை**

+94(11)2350000 என்ற எமது 24 மணிநேர தொடர்பு நிலைய தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் மூலம் நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம். எமது கிளை ஒன்றிற்கும் நீங்கள் விஜயம் செய்யலாம். கிளைகளின் விபரங்களை எமது வலைத்தளத்தில் பாருங்கள்.